**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**அசல் வழக்கு எண். 301/2019**

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய சிவாஜி கணேசன் **PW1.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 06.03.2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | **சிவாஜி கணேசன்** | | |
| Father /Husband Name | : | **மாசிலாமணி** | Court | : |
| Village | : | **மேலசிங்கானோடை** | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 65/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

29.05.1976 தேதியிட்ட பாலகிருஷ்ணன் என்பவருக்கு கோவிந்தசாமி எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 09.07.1977 தேதியில் பாலகிருஷ்ணனுக்கு தங்கராசு ஆசாரி வகையறா எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 20.06.1973 தேதியில் பாலகிருஷ்ணனுக்கு காளிமுத்து எழுதிக்கொடுத்த கிரய சானத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 30.12.1987 தேதியிட்ட பாலகிருஷ்ணனுக்கு கஜேந்திரன் வகையறா எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 23.06.1974 தேதியில் பாலகிருஷ்ணனுக்கு முத்துலட்சுமி

எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேலும் ஆவணங்களை குறியீடு செய்வதற்காக வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இனங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.